தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் &
உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-6-2016

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விவசாய பட்டப்படிப்பு**
**தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2016-17ம் கல்வி ஆண்டிற்கான பி.எஸ்.சி. (விவசாயம்) உள்ளிட்ட 13 வகையான பட்டப்படிப்புகளுக்கு 12-5-2016 முதல் 11-6-2016 வரை இணையதளம் மூலமாக விண்ணப்பிக்க கோரி இருந்தது. மொத்தமாக 2,600 இடங்களுக்கு 36,322 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு இன்று (20-6-2015) காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு. ராமசாமி அவர்கள் வேளாண் பட்டப்படிப்புக்கான தரவரிசை பட்டியலை இணையதளத்தில் வெளியிட்டார்.

விவசாய பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்தவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் www.tnau.ac.in என்ற இணையதளத்தில தரவரிசைப் பட்டியலை பார்த்துக் கொள்ளலாம்.

இந்த தரவரிசைப் பட்டியலில் 199.75 மதிப்பெண்கள் பெற்று நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தீனேஷ்வர், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தக்ஷினாமூர்த்தி மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மனோஜ்குமார் ஆகிய மூவரும்முதல் மூன்று இடங்களைப் பெற்றனர்.

ஏற்கனவே அறிவித்திருந்தது போல 27-6-2016 மற்றும் 28-6-2016 அன்று சிறப்பு

கலந்தாய்வுக்கான விளையாட்டு பிரிவு, ஒய்வு பெற்ற ராணுவத்தினர், மாற்று திறனாளிகள் மற்றும் சுதந்திர போராட்டவீர வாரிசுகளின் ஒதுக்கீட்டுக்கான கலந்தாய்வு தொடங்கும். மேலும் 4-7-2016 அன்று முதற்கட்ட பொது கலந்தாய்வு தொடங்கும்.

2016-17ம் கல்வி ஆண்டிற்கான வகுப்புகள் வரும் 1-8-2016 முதல் துவங்கவுள்ளது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்